## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 41. ஸ்ரீதனா சட்ஜி

---

ஹரியானா பகுதியில் வாழ்ந்த மிகச் சிறிய உழவர் தனா சட்ஜி.தனக்கு உள்ள சிறிய வயல் பகுதியில் பருவத்துக்கு ஏற்பப் பயிர் செய்து வாழ்பவர்.பூர்வ ஜென்ம புண்யத்தால் அவ்வூரில் தினமும் மாலையிலும் காலையிலும் நிகழும் ஸ்ரீமத் பாகவத ப்ரச்சார கோஷ்டியில் கலந்து கொள்வார்.

போகப் போக ஸ்ரீமத் பாகவத் கூறும் மேன்மையான பக்தியும் அதன் மூலம் மனிதன் பெற வேண்டிய உயர்ந்த பலனையும் அவர் எண்ணி எண்ணித் தானும் அதைப் பெறவே மனிதனாக வந்ததை உணர்ந்தார்.அதன் பலனாய், தினமும் ஒரு ஏழைக்காவது ஒரு கை அன்னம் அளித்து உதவினார்.வருடம் ஒரு முறை தீபாவளிக்கு ஒரு ஏழைக்கு உடை வாங்கி அளித்தார்.

இவரது அன்பர் கைங்கர்யத்தை ஏளனம் செய்து இவரைத் தூற்றினர் உறவினர்."கைக்கு மிஞ்சிய தர்மம் தேவையா?" என்று கேலி பேசினர்.

**கல்லான இறைவன்**

பாகவதக் கூட்டம் தினமும் சாளக்ராம பூஜை செய்து வருவதைக் கண்டு, தனக்கும் ஒரு சாளக்ராமத்தை அருளும்படி வேண்டினார்.இவரது ஆச்சாரம் குறைவு, இவரால் ஆச்சாரப் படி பூஜை செய்ய முடியாது என்று அன்பர்கள் அவர்களுக்குள் பேசிக்கொண்டனர்.ஆனால் இவரது அன்பர் சேவை, பக்தி அவர்களை வேறு விதமாகவும் சிந்திக்க வைத்தது.

கடைசியில் சாளக்ராமம் போல இருந்த ஒரு மொழு மொழு கல்லை அவருக்குத் தந்து விட,அதை உணந்து கொண்ட அவர் அதை வெளிக்காட்டாமல், மிக மிக ஸ்ரத்தையாக அதை பூஜித்தார்.

**வயலில் செய்த பூஜைகள்**

உலகில் அனைத்தும் ப்ரஹ்ம தத்வம் என்று பாகவதம் சொல்லும் போது, சாளக்ராமம் என்ன, கருங்கல் என்ன? அனைத்தும் ஒன்றே என்று உணர்ந்தார்.உழவுத் தொழில் செய்யும் போது, வயலில் மரத்து அடியில் அழகிய கோரைப் பாயில் ஒரு இலை மேல் தன் மூர்த்தியை வைத்து, வயலுக்குப் பாய்ச்சும் நீரையே கொண்டு அபிஷேகம் செய்வார்.பூக்கள் கொண்டு கோவிந்த நாமம் சொல்லி 108முறை அர்ச்சிப்பார்.பின் தனக்கு மனைவி சமைத்து அளித்த உணவை முதலில் நிவேதனம் செய்த பின் உண்பார்.போகப் போக அவரது

மூர்த்தியுள் அவர் கண்ட ப்ரஹ்ம தத்வம் அவருள்ளே மிளிர ஆரம்பித்தது.தான்-தன் செயல் என்பதெல்லாம் ஒரே சத்யத்தின் இயக்கம் என்பதை உணர்ந்து கொண்டு தெய்வீக தரிசனத்தை உணர்ந்து ஆனந்தத்தில் வாழ்கிறார்.அந்நிலையில் இவரது உணவை இறைவன் கூட அமர்ந்து ஸ்தூல வடிவிலும் உண்ண ஆரம்பித்தான்.

**ஆஷாட ஏகாதசிக்கு அன்ன தானம்**

ஆஷாட ஏகாதசிக்கு அனேக அன்பர்கள் பண்டரீ யாத்ரையை மேற்கொண்டனர்.அதில் ஒரு கூட்டம் இவர் ஊருக்குள் வந்து இவரது வீடு தேடி வந்து உணவு கேட்டது.அப்போது தான் விதை நெல்லை இவர் விதைக்க எடுத்து வைத்து இருந்தார்.மனைவியின் ஆலோசனைப் படி, அந்நெல்லை அன்னதானம் செய்ய அளித்தார்.இதை அறிந்த உறவினர் திட்டித் தீர்த்தனர்.

**பாண்டுரங்கன் விதைத்த நெல்**

அடுத்த நாள் சரி நெல்லுக்கு பதில் கம்பை விளைவிக்க எண்ணி, வீட்டில் இருந்த விதைக் கம்பை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்றால் அங்கே வயல் முழுதும் நெல் விதைக்கப்பட்டு இருப்பதை அவர் கண்டு இறைவனின் லீலையை எண்ணி எண்ணி உருகினார்.அதைக் கண்ட மக்கள் பலர் சொல்வது அறியாமல் திகைத்து மகிழ்ந்தனர்.

அப்போது இவரது மேன்மையான பக்தியை உணர்ந்த பாகவதர்கள் இவரிடம் கல்லைக் கொடுத்ததை ஒப்புக் கொண்டு மன்னிப்பும் வேண்டினர்.
"**அன்பர்களே! எல்லாமே ப்ரஹ்மம் என்று கீதையில் சர்வேஸ்வரன் சொல்ல, கல் வேறு சாளக்ராமம் வேறா? இதை அன்றே அடியேன் உணர்ந்து கொண்டேன்.அதனால் தான் வெற்று வயலும் விதை நெல்லும் ஒன்றே என்ற ப்ரஹ்ம ரஹஸ்யம் தெளியப் பெற்றேன்!**" என்று அடக்கத்துடன் கூறினார் தனாஜி.

**"இது மட்டும் தான் விக்ரஹம், தெய்வம்" என்றால் அது ஒரு மாயை - அளவு ஆகிவிடுகிறது**.இதை விக்ரஹ ஆராதனை செய்வோர் உணர்தல் மிக மிக அவசியம்.விக்ரஹமாக இருக்கும் இறைவனே மிஅ ப்ரம்மாண்ட ப்ரபஞ்ச ரூபமாக உள்ளதை உணர்க, அன்பு செய்க, மகிழ்க!

ஹரி ஓம்!